Reg. No. M 1434    தனிப்பிரதி அணா 0—1—6

# நாடார்குலமித்திரன்

# THE NADAR KULA MITRAN

நாடார்குல மித்திரன் சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, இலோன் முதலிய உள்நாட்டிற்கு வருடம் 1-க்கு ரூ 4-0-0.
சிங்கப்பூர், பினாங்கு, மலாக்கா முதலிய வெளிநாட்டிற்கு வருடம் 1-க்கு ரூபா 5-0-0.

திங்கட்கிழமை தோறும் வெளிவரும்.

## வாரப் பதிப்பு.

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்" (திருக்குறள்)

சுதந்திரம்! சமத்துவம்!! சகோதரத்வம்!!!

சூ. ஆ. முத்துநாடார், பத்திராசிரியர்.

நாடார்குல மித்திரன் விளம்பர விகிதம்.

கலை 1-க்கு தடவை 1-க்கு ரூபா 8-0-0.
சில்லரை விளம்பரம் அங்குலம் 1-க்கு ரூ 0-8-0
நீண்டகாலம் விளம்பரஞ் செய்வோர் மானேஜருக்கு எழுதவும்.

மலர் 8 | கலியப்த ௵ ௴ பிரபவ௵ ஆடி மீ ௨ திங்கட்கிழமை 1927 ௵ ஜுலை மீ 18 உ | இதழ் 48

## நாடார்பாங்குலிமிட்டெட், தூத்துக்குடி.

### விசேஷ வட்டி.

ஒரு வருஷத்துக்குக் குறையாமல் கவணைக்குப்போடும் தொகைக்கு வருஷம் ஒன்றுக்கு ரூபாய் 100க்கு ரூ 6 வீதம் வட்டி கொடுக்கப்படும்.

விசேஷமாய் வைதவர்கள், விதவைகள், பள்ளிக்கூடங்கள், பேட்டைகள் ... முதலிய ... பணத்தை ... பத்திரமாய் நல்ல வட்டியிலும் வைப்பதற்கு இதுவே ஏற்ற இடம். ... வர்களுக்கு வேண்டிய ... காரியதரிசிகள், ... வட்டியும் ... கொடுக்க விருப்பமேல் அவ்விதம் கொடுக்க ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

... விபரங்களைப் பற்றி ... எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

## பச்ச முனிவன் சரிதை

வெளியாகிவிட்டது! வெளியாகிவிட்டது!!
"பக்திரஸ மாலை" மலர் ஒன்று.
சங்கீத சாஹித்ய விற்பனர்களுக்கு நற்றருணம்!!!

இது பத்திரிகா திருபரான ஆவரைகுளம் ஸ்ரீ ஞா. பா. வேதநாயகம் அவர்களால சதகதா காலக்ஷேபஞ் செய்வதற்கும் நாடகம் நடிப்பதற்கும் ஏற்றவிதமாக பொருள், மோனை முதலியவைகளுடன் தற்கால அற்புத கற்பித அதிசய மெட்டுகளில் இயற்றப்பட்டது.

ஸ்ரீலஸ்ரீ மகாகனம் அத்தியக்ஷ குரு அஸரிய தீக்ஷிதரவர்கள் அரிய முகவுரையுடன் கூடியது. விலை அணா நான்கு. (ஒரு புத்தகம் வேண்டுவோர் 5 அணா தபால் பில்லை அனுப்பவேண்டும். மூன்று புத்தகம் முதல் மேற்கொண்டு வாங்குபவர்களுக்கு வி. பி. மூலம் அனுப்பக்கூடும்.

இனும்! இனும்!! இனும்!!!

... பச்ச முனிவன் சரிதையை ... ஆதரவு செய்பவர்களுக்கு ஸ்ரீமான் கிருஷ்ணசாமி சர்மாவால எழுதப்பட்ட தேசீய நூல்கள் இனாமாகக் கொடுக்கப்படுகின்றன. பரிசு விபரங்களை புத்தகத்தின் கடைசிப் பக்கத்தில் பார்க்கலாம். ஏராளமாய் விற்பனை செய்பவர்களுக்கு தக்க கமிஷனும் புத்தகப் பரிசும் கொடுக்கப்படும். விலாசம்:—

"நாடார்குலமித்திரன்" ஆபீஸ், ஞா. பா. வேதநாயகம்
அருப்புக்கோட்டை ... எம். ஸி. ஏ. Y. M. C. A.
கொழும்பு.

## போலிப்பொடிகளின்கேலிஇனிசெல்லாது

24 தங்கமெடல்கள் பரிசுபெற்று ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிகள் குவியப்பெற்ற

### மதராஸ் N. V. ஷண்முகம் கம்பெனியார்

# ஸ்பெஷல்பட்டணம்பொடி

காரம், மணம், குணம், நிறம், வாடை கமழுகின்றன.

உபயோகித்த கனவான்கள் மனதை குதூகலிக்கச் செய்கிறது.

... விக்கின்றன.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# தென்னிந்திய கதர்க் காட்சி.

## மகாத்மா காந்தியின் அழுதகண்ணுஞ்சிந்தையும்.

### மஹாத்மாஜீயின் பிரசங்கம்.

நண்பர்களே !

இன்றைய நடவடிக்கைகளில் நீங்கள் காட்டும் உற்சாகத்தை, நிதர்சனப் படுத்திக் காட்டுவதற்கு சிறந்தவழி இக்கூட்டம் முடிவடைந்தவுடன், காட்சி நடைபெறும் இடத்திற்குச் சென்று அங்குள்ள கடைகள் காலியாய் விடும்படி, கதர் துணிகளை தையும் வாங்கிவிட வேண்டும். நடந்த ஆறு தினங்களில் இக்காட்சியில் விற்பனையான கதர்க் கணக்கைப்பற்றி ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் எடுத்துரைத்து, தமது திருப்தியையும் வெளிப்படுத்தினார். ஆனால் எனக்கு அவ்விதத் திருப்தியும் ஏற்படவில்லை. ஏனென்றால், இக்காட்சியில் அநேக ஜவுளிக்கடைகள் இருக்கின்றனவென்றே நினைக்கின்றேன். இவ்வூரிலுள்ள ஜனங்கள் அணியும் ஆடைகளையும் பார்க்கின்றேன். இவ்விரண்டையும் கவனிக்கும்போது இக்காட்சி ஏற்படுத்தப்பட்ட பிறகும் 8000 ரூபாய்க்குத்தான் கதர் விற்பனையாயிருக்கிறதென்றால், அதை வெகு அற்பமான விற்பனையென்றே சொல்லவேண்டும். கதர் அபிவிருத்தியின் பொருட்டு பாடுபடுவோர் வெகு கஷ்டமான வேலையைச் செய்யவேண்டியிருக்கின்றது. இதற்குமுன் இவ்விடங்களில் நடத்தப்பட்ட காட்சிகளில் இவ்வளவு கூட பொதுஜன அபிமானம் ஏற்படாதிருந்து விட்டதை மனதிலிருத்தி ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் இச்சமயத்தில் திருப்தி காட்டுகின்றாரெனக் காண்கின்றது. ஆனால் இவ் ஆரிய நாட்டில் வசிக்கும் நீங்கள் இனிச் செய்யவேண்டிய வேலைகளைப்பற்றி நான் இச்சமயம் குறிப்பிடாமலிருப்பேனானால் அது ஒரு தவறாகுமென்று நினைக்கின்றேன்.

நம்முடைய நாகரீகம் நகரங்களிலிருந்து தோன்றியதல்ல. இனி எக்காலத்திலாவது ஒரு சமயத்தில் நம் நாட்டிலே மேனாட்டு நாகரீகத்தை நிலைநாட்ட முடியுமென்று கனவு காண்பேர் உண்டானால் அத்தகையோருக்கு நான் செய்யக்கூடிய எச்சரிக்கை என்னவென்றால், அந்தக்கனவு இந்தத் தலைமுறையிலேயோ இன்னும் சில தலைமுறைகளுக்குள்ளாகவோ ஈடேற மாட்டாதென்பதேயாகும். நம்தேசம் எப்படியிருக்கின்ற தென்பதைப்பற்றி கணப்பொழுது சிந்தனைசெய்யுங்கள். 19 ஆயிரம்மைல நீளமும் 55 ஆயிரம்மைல் அகலமுமுள்ள விஸ்தாரமான தோர் கண்டமாக எழுலக்ஷம் கிராமங்கள் உள்ளதாய் இருக்கின்றது. இந்த கிராமங்களோ இன்று நேற்று தோன்றியவையல்ல. அநாதி காலந்தொட்டு இத்தேசத்திலிருந்து வருகின்றன. அமெரிக்கா ஒரு புதிய கண்டம்—கோடிக்கணக்கான ஏகரா விஸ்திரணமுள்ள நிலங்கள் அங்கு தரிசாயிருக்கின்றன. ஜனத்தொகையே அங்கு வெகு குறைவு. இங்கிலாந்திலிருந்து ஜனங்கள் அங்கு குடியேறிய போது அங்கு கிராமங்கள் இருந்து வரவில்லை. கொலம்பஸ் அமெரிக்காவைக்கண்டு பிடித்தபோது அங்கு கிராமங்கள் இருந்து வரவில்லை. எனவே, அங்கு புதிய நாகரிகம் ஏற்படமுடிந்தது. அங்கு தோன்றிய நாகரீகம், அந்த நாட்டுக்கு மிகவும் பொருந்தியதாயிருக்கலாம். ஆனால், மானிடர் கைப்பட்டு வளங்குன்றிப்போகாத நிலங்களையுடைய அமெரிக்க நாட்டிற்குப் பொருத்தமான நாகரீகம், வெகு புராதனமான நம் நாட்டுக்கும் பொருத்தமானதாயிருக்குமென்று கூறுவது என் அபிப்பிராயத்தில் சரியெனத் தோன்றவில்லை. நமதேச ஜனங்களின் வழக்க பழக்கங்களும் ஆசாரங்களும் வெகு புராதனமானவை. நம் ஜனங்களோ ஆசாரச்சீர்திருத்தங்களை இலகுவில் ஏற்றுக்கொள்ளாத சுபாவமுடையவர்கள். நினைத்த மாத்திரத்தில் சீர்திருத்தங்களை ஜன சமூகத்தில் செய்து விடுவதென்பது நம் தேசத்தில் முடியாத காரியமாயி[illegible] நிலைமையிலிருக்கும் இந்தேசத்திலே, நவீன மேனாட்டு நாகரீகத்தைக் கொண்டுபோய் நாட்டிச் சிரப்படுத்திவிடலாமென்று நீங்கள் நினைத்தால், ஒரு நிபந்தனையின் மீது தான் அதை நீங்கள் சாதிக்க முடியும். அந்த நிபந்தனை என்னவென்றால் சரித்திரக்கதைகளில் நாம் படிக்கும் ஜெங்கிஸ்கான் அனுஷ்டித்த நிபந்தனைகளேயாகும். ஜெங்கிஸ்கான் என்ன செய்தார் என்ன செய்யவில்லையென்பது எனக்குத் தெரியாது. ஆனால் சரித்திரங்களில் அவரைப்பற்றிக் கூறப்பட்டிருப்பது உண்மையானால், நம்தேசத்து கிராமங்களில் நவீன நகர நாகரீகத்தை முற்றமுடியப் புகுத்துவதற்கு முன்னதாக ஆயிரக்கணக்கான "ஜெங்கிஸ்கான்"களை நீங்கள் வசவத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். அப்படிப்பட்ட ஜெங்கிஸ்கான்களை வைத்துக்கொண்டு நவீன நாகரீகத்திற்குத் தகுதியுள்ளவர்களை மட்டும் வைத்துக் கொண்டு வயோதிகர்களையும் ஸ்திரீகளையும் குழந்தைகளையும் மிருகங்களைப் பாவித்து வதைத்துத் தள்ளிவிட்டு, நவீன மேனாட்டு நாகரீகத்தை கிராமங்களில் நாட்டிவிடலாமென்ற கனவை ஈடேற்றிக் கொள்ளவேண்டும். அப்படிப் பிரியப்படாமல், நமது கிராமங்கள் தற்போதிருக்கும் நிலைமையிலேயே இருந்துவர விட்டுவைத்து மேனாட்டு நாகரீகத்தில் சிறப்புற்றதாகக் காணும் அம்சங்களை மட்டும் நம் கிராம ஜனங்கள் பின்பற்றி நடந்து பயனடைய விரும்பினால் அப்பொழுது உங்களெல்லோருக்கும் போதிய அளவு வேலையிருக்கிற தென்றே சொல்வேன்.

இந்த பரிசுகள் பெற்றுச் சென்றவர்களைக்கண்டு, என் மனதில் உதித்த எண்ணங்கள் உங்கள் மனதிலும் உதித்தனவோ என்பதைநான் அறியேன். இவர்கள் பிராமணன் பிராமணனல்லாதவன் இந்து முஸ்லீம் ஏழை பணக்காரன் என்ற வித்தியாசத்தை அறவே மறந்தவர்கள். அதோடு, ஒரு விதத்தில் இவர்களெல்லோருக்கும், பொதுவான லக்ஷியமொன்றிருக்கின்றது. அது என்னவென்றால், வறுமை வாய்ப்பட்டுக் கிடக்கும் நம் தேசத்தை சுபிட்சமுறச்செய்ய வேண்டுமென்பதேயாகும். இந்த பொதுவான லட்சியத்தைப் பின்பற்றி திருவியத்தராய்ப் பிறந்தவர்களும் பரமஏழைகளோடு சேர்ந்து சமத்வம் பாராட்டி உழைக்கின்றார்கள். குதிரைப் பந்தயங்களிலும் பந்தாட்டங்களிலும் நீங்கள் காட்டும் சிரத்தையை இவ்விஷயத்திலும் காட்டுகிறீர்களா இல்லையா என்பதை நான் அறியேன். குதிரைப் பந்தயங்களிலும் பந்தாட்டங்களிலும் பரிசுகள் கிடைக்கப் பெறின் நீங்கள் எவ்வளவு சந்தோஷமும் உற்சாகமும் காட்டுவீர்களென்பது எனக்குத் தெரியும். ஆனால் அதே உற்சாகமும் நூல் நூற்பதிலும் பஞ்சடிப்பதிலும் உங்களுக்கு இருக்குமோ இராதோ என்பதை நான் அறியச்சக்தியற்றவனாயிருக்கின்றேன். நீங்கள் இக்கதர்க் காட்சிக்குச்சென்று பார்வையிட்ட பிறகேனும் இந்த இயக்கத்தினுள் மறைந்து கிடக்கும் தத்துவங்களை உண்மையாகவே உணர்ந்து கொண்டீர்களாவென்பது எனக்குத் தெரியாது. நீங்கள் உண்மையாக அவற்றை உணர்ந்து கொண்டிருப்பீர்களானால் இப்பொழுது என் இருதயத்தை வாட்டும் உணர்ச்சி உங்கள் இருதயங்களையும்பற்றி யிருக்குமென்று நினைக்கின்றேன். நான் துர்பலஸ்தனாக இருந்தும் இந்த உணர்ச்சியே என்மனதிலுள்ள விஷயங்களை வெளியிட்டு உங்கள் முன் இவ்வாறு பேசும்படி தூண்டுகின்றது. (மகாத்மாஜீ இச்சமயத்தில் சோகாக்ராந்தனாய் பல பலவென்று கண்ணீர் சொரியத் தொடங்கினார். இரண்டு நிமிஷங்கள் வரையில் அவரால் பேச முடியவில்லை. கூடியிருந்த ஜனங்களின் கண்களிலும் நீர்த்துளிகள் ததும்பின.) மகாத்மாஜீ மீண்டும் பேசத் தொடங்கிச் சொன்னதாவது:—

இந்தக்கதர்க்காட்சியிலும், இக்காட்சியில் நிதர்சனப் படுத்தப்பட்ட செயல்களிலும் அடங்கிய கருத்தை நீங்கள் உணர்ந்து கொள்வதற்கு, புத்தியும், பலமும் அளிக்க வேண்டுமென்று கடவுளை வேண்டிக்கொள்ளுகின்றேன். நான் அதிகம் சொல்லவேண்டிய செய்தியொன்றுமில்லை. நான் பேசிக்கொண்டு வரும்போதே என் மனோ[illegible]தற்கு என்னை மன்னியுங்கள். என் மனம் இவ்விஷயத்திலேயே ஊன்றிப் போயிருப்பதால், என்னை யறியாது பல சமயங்களில் நான் தளர்வடைகின்றேன். சில சமயங்களில் துக்கமே என்னைச் சூழ்ந்து கொள்ளுகின்றது. அதினின்றும் வெளியேற எனக்கு ஆற்றலை அளிக்குமாறு ஈஸ்வரனைப் பிரார்த்திக்கின்றேன். உங்களையும், இன்று பரிசுகள் பெற்றவர்களையும் இவ்விழாவையும் கடவுள் ஆசீர்வதிப்பாராக. உங்களெல்லோருக்கும் வந்தனம்.

# மனோரஞ்சிதம்.

சுயமரியாதை சுயராஜ்ய பாதை. தனக்குள்ள சுதந்திரத்தைத் தேடிக் கொள்ளாதவன் பிறர்க்காக—தேசத்துக்காக—சுதந்திரம், சமத்வம், சகோதரத்வம் உண்டாக்குவதற்காகப் பாடுபடுகிறேனென்பது விந்தையே.

* *

நாம் பிறர்க்கு அடிமைப்பட்டிருப்பதால் நம்மை நாம் சீர்திருத்த வேண்டிய அவசியமில்லை யென்பது நியாயமில்லாத அபிப்பிராயமே.

* *

அன்பான நண்பர்களோடு செய்யும் பிரயாணத்துக்கு விரோதமானது குடும்பத்தோடு செய்யும் பிரயாணத்தின் கஷ்ட சந்தோஷங்கள்.

* *

அதிக அன்புக்கு அதிகப் பிரிவு ஏற்பட்டு விடுகிறது. அதிகப் பிரிவினால் அதிக மாயன்பு வளர்ந்து ஜ்வலிக்கிறது. இதன் மத்தியில் சோதனைகளும் பங்குகள் எடுத்துக் கொள்கின்றன.

* *

கூட்டம் கூடுமிடங்களிலிருந்து பெரிய கொண்டாட்டங்களும், பிரமாண்டமான சண்டை சச்சரவுகளும் ஜனிக்கின்றன.

* *

மனச்சாட்சிக்கு விரோதமான காரியங்களில் நமக்குள்ள செல்வாக்கைச் செலுத்துவதினால் அச்செல்வாக்குக்கே காலரா, பிளேக் முதலிய அபாய பிணிகள் தோன்றி மரண மணி அடிக்கிறது.

* *

ஆடம்பரம்பளபளப்பான "இமிடேஷன்", போலிக்கல்; எளிய வாழ்க்கை வைரக்கல். சீமான்களால் தான் வைரக்கல்லைப் பெற முடிவதுபோல மேன்மை மலிந்த பெரியோர்களால் தான் எளிய வாழ்க்கையின் மேன்மையைப் பெற முடியும்.

* *

கோபத்தோடும், துக்கத்தோடும், பசியோடும், அவசரத்தோடும், வேறு நினைவுகளோடும், கடுஞ் சொற்களோடும் கடிதம் முதலியவைகள் எழுதுவது பின்னால் கவலையைச் சேர்ப்பிக்கும்.

* *

அலக்ஷியம் செய்வதனால் பல சிக்கல்கள் விளைந்தாலும் விளையலாம். அற்பம் கற்பகமாய் மாறினாலும் மாறலாம். ஒரு போக்கிரிப் பையன் உலகம் போற்றும் உத்தமனாக வந்தாலும் வரலாம்.

* *

ஒவ்வொன்றாக எதை எடுத்துக் கொண்டு நன்கு சிந்தித்துப் பார்த்தாலும் உலகத்தில் எதற்கும் விரோதமானதில்லாமலில்லை, கடவுளுக்கே விரோதியுண்டென்றால் பின்னெதைப் புகல்வது !

* *

கட்டைப் பொம்மைகள் மரமென்னும் பெயரை மறைப்பதுபோல ஆசையானது அனவசியத்தை மறைத்து விடுகிறது.

* *

கலங்கத்தை மணந்து கொண்டவனைத் திரும்பும் பயமுறுத்துகிறது.

* *

நாம் பிறரைப்பற்றி குறை கூறுவது கணக்கல்ல. ஆனால் அவர் நிலைமையில் நாமிருந்தாலெப்படி யென்று கவனிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது.

அ. ஆ. அண்ணாமலை.

# பல திரட்டு.

பர்மோசா தீவில் விவாக முறை ஒரு நூதனமாம். அதாவது, ஒரு மாப்பிள்ளைக்கு ஒரு பெண் அறிமுகமாக்கி வைக்கப்பட்ட பின் பெண் வீட்டு வாசலில் மாப்பிள்ளை ஒரு கட்டு விறகை வைத்து விட்டு வந்துவிடுவாராம். அவ்விறகுக் கட்டைத் தூக்கிக் கொண்டால் பெண்ணுக்கு அம் மாப்பிள்ளையை மணந்து கொள்ளப் பிடித்தமென அர்த்தங்கொள்ள வேண்டுமாம்.

இந்தியாவில் மொத்தம் 40000 மைல் நீளமுள்ள இரயில் பாதையிருக்கிறது.

1925—26-ல் இந்தியாவில் 12757 மோட்டார்கள் இறக்குமதியாகியிருக்கின்றன. 1926—27-ல் 13197 மோட்டார்கள் இறக்குமதியாகியிருக்கின்றன.

சீயக்காயை விதையை எடுத்து விட்டு வெற்றிலையில் வைத்து மடித்து தின்றால் ஐந்தே நிமிஷத்தில் தேள் கடி விஷம் மாறிவிடும்.

மேன்மை தங்கிய அரசரின் வைத்தியரான லார்ட் டாசன் தற்காலத்தில் குடியை நிறுத்த முடியாதெனச் சொல்கிறார்.

ஆயுதப் பரிகரண மகாநாட்டில் கிரேட் பிரிட்டனுக்கு காத்த கப்பற் படை தானும் வைத்திருக்க அமெரிக்கா விரும்புவதாகக் கூறியது.

மானாமதுரையில் வைகையாற்றுப் பாலத்தைச் சென்னைக் கவர்னர் 28—6—27-ல் திறந்து வைத்து அதற்கு 'ராஜ ராஜேசுவர சேதுபதி பாலம்' எனப் பெயரிட்டிருக்கிறார்.

ஆயுதச் சட்ட மறுப்பைக் கொண்டு சத்தியாக்கிரஹத்தைத் தோற்றுவிக்க எண்ணி மதுரையில் ஆரம்பித்திருக்கும் சத்தியாக்கிரக இளைஞர்கள் மதுரை மட்டுமின்றி பல ஊர்களுக்கும் சென்று அங்கங்கே வாளேந்தி நகர் வலம் வந்து போராட்டத்தை நடத்தத் தீர்மானித்து அதன்படி பல இடங்களுக்கும் பிரயாணப்பட்டுவருகிறார்கள். எங்கு மறுப்பு ஏற்படுகிறதோ அங்கே சத்தியாக்கிரகத்தை ஆரம்பிப்பதாக எண்ணியுள்ளார்கள்.

கடந்த வருடம் அக்டோபர் ௴ 27 உ பூமாலை நாடாரைக் கொலை செய்ததாக சின்னக்குருசாமி நாடார் மீதும், வேறு ஐவர் மீதும் இராமநாதபுரம் செஷன்ஸ் கோர்ட்டில் நடந்த வழக்கில் எதிரிகள் யாவரும் குற்றவாளிகள் என அவிஸர்கள் அபிப்பிராயம் கொடுத்தனர். ஜட்ஜ் அதை நிராகரித்து எதிரிகள் குற்றவாளிகளல்லரெனத் தீர்ப்புக் கூறி விடுதலை செய்திருக்கிறார்.

பரோடா சமஸ்தானத்தில் பெண்களின் விவாக வயதை பதினைந்தாக உயர்த்த பாலிய விவாக ரத்து விஷயமாய் ஆலோசனைக் கேற்படுத்தப்பட்ட கமிட்டியார் ஏகமனதாய்த் தீர்மானித்திருக்கிறார்கள்.

இந்தியக் காங்கிரஸில் அங்கத்தினர்களாகச் சேர விரும்புவோர் சர்க்கார் பட்டங்களை ஒழித்தலோடு வகுப்பு வாதத்தை நீக்கி தேசியத்தைப்பற்றுக் கோடாகக் கொள்ள வேண்டுமென்ற சட்டத்தை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் தீர்மானிக்கும்படி கொண்டு வரப் போவதாக ஸ்ரீ டி. குழந்தை அறிவித்திருக்கிறார்.

கிரேட் பிரிட்டனிலுள்ள சார்க் என்ற தீவில் 98 பேர்களே வசிக்கின்றனராம். சுய முயற்சியாலேயே உழுதுண்டு வாழ்கின்றார்களாம்.

வங்காளக் கவர்னரைக் கொலை செய்ய சதியாலோசனை செய்த ஒரு பெருங் கூட்டத்தின் தலைவர் ஸ்ரீ சுபாஷ் சந்திரபோஸ் என காமன் சபையில் மிஸ்டர் பில்சர் கூறினாராம். இவ்வுலகத்தில் திருக்கு எவ்வளவு ஏறியிருக்கிறது !

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

நாடார்குலமித்திரன்

பிரபவ ௵ ஆடி ௴ ௨௳

## சுயமரியாதை இயக்கம்.

உலகத்தில் எந்தக் காலத்தில் அதர்மம் மிகுந்து தர்மம் குறைகிறதோ அந்தக் காலத்திலெல்லாம் நான் அவதாரம் செய்து அதர்மத்தை வென்று தர்மத்தை நிலைநாட்டுவேனென்று கிருஷ்ணன் அருச்சுனனுக்குச் சொல்லியிருக்கிறார். அவ்வாறே ஒவ்வொரு காலத்திலும் துன்மார்க்கர்களைத் தொலைத்து நன்மார்க்கத்தை நிலைநாட்டும் பெரியோர்களையெல்லாம் விஷ்ணு அம்சமுள்ள அவதார புருஷர்களென்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். அது உண்மையென்று ஒப்புக்கொள்வதற்கு உலக மக்கள் மனதையெல்லாம் வசியப்படுத்துமோர் பெரிய சக்தி அவர்களிடமிருப்பதே சான்றாம்.

புத்தர், சங்கரர், மத்வர், ராமானுஜர், இராமகிருஷ்ண பரமஹம்சர், இராமதீர்த்தர், விவேகாநந்தர் முதலிய பல மகான்கள் அவதாரம் செய்து, நாட்டினிடை தோன்றிய கொடுமைகளை ஒருவாறு தணித்திருக்கின்றனர். என்றாலும், மிஞ்சிய கொடுமை மிஞ்சி ஏழு கோடி மக்கள் மனிதராய்ப் பிறந்தும் மனிதரால் மிருகத்திலுங் கேடாய் விலக்கப்பட்டதோடன்றி அவர்கள் எக்காலும் பாதாளத்திலே கிடந்து பரிதபிக்க வேண்டுமென்று வேதாகமங்களையும் எழுதிவைத்து விட்டார்கள். இக்கொடுமை காட்டுத் தீ போற் பரவி நம் நாட்டையே கெடுத்து சுயமரியாதையற்ற நாடாகச் செய்துவிட்டது. அதற்கு அந்நியர் ஆட்சி அனுகூலமாய் வந்தது. ஆகவே அரசியலிலும், சமுதாயத்திலும் மக்கள் சுயமரியாதையை இழந்தனர்.

உலகத்தையே போருக்கிழுத்த ஜெர்மன் போர் முழக்கத்தினுலெழுந்த புத்துணர்ச்சி இந்தியாவிலும் மக்கள் மனதைத் தட்டியெழுப்பி சுயமரியாதையைக் காப்பாற்று என்றுபதேசித்தது. ஆனால் சுயமரியாதை எழுச்சிக்குப் பிராமணச் சூட்சியும், பிரிட்டிஷ் ஆட்சியும் தடைக் கல்லாயிருப்பது கண்ட மகாத்மா காந்தி இரண்டையும் வெல்ல சரியான உபாயந் தேடினார். அதாவது, கைராட்டினம், தீண்டாமை. இவ்விரண்டையும் கேட்ட பிரிட்டிஷ் ஆட்சியும், பிராமணச் சூட்சியும் மிக வெருண்டன வென்றாலும், மகாத்மா காந்தி முழுதும் வென்றுவிடவில்லை; கொடுமையை ஒருவாறு தணித்து விட்டார். அவ்வகையில் அவரும் ஒரு அவதார புருஷரே; விஷ்ணுவின் அம்சமே.

தமிழ் நாட்டு ஜனங்களை டாக்டர் நாயுடும், ஸர். செட்டியாரும் ஒருவாறு தட்டியெழுப்பிவிட்டார்களென்றாலும், பெண்ட்லண்டு பிரபுவுக்குப் பின்னால் அவர்கள் முயற்சி பின்னடைவே சென்று, சென்ற தேர்தலில் முற்றிலும் முறியடிக்கப்பட்டுப் போனார்கள். தமிழ் நாடே கலகலத்துப்போயிற்று. நாட்டில் க்ஷத்திரியனும் வைசியனுமில்லையென்று பிராமணப் பித்து பிதற்றவாரம்பித்துவிட்டது. எல்லாம் சூத்திர மயமாய் விடுமோ, பிராமணரல்லாத பெருஞ் சமுகமே தீண்டாதவர்களாக சபிக்கப்படுமோ வென்ற பயமே உருவாய் யெங்குமுலாவத் தலைப்பட்டது.

இச்சமயம் மகாத்மா காந்தி சிஷ்யர் திரு. ஈ. வி. இராமசாமி நாயக்கர் சுயமரியாதை இயக்கத்தை எழுப்பினார். மழை கண்ட கோவைபோல மக்கள் மனம் குளிர்ந்தது. தோற்றுப்போன ஜஸ்டிஸ் தலைவர்கள் புத்திசாலியான விபூஷணனைப்போல் ராமா, ராமாவென்று நமது இராமசாமி நாயக்கரை வந்தடைந்தார்கள். சாந்தமே உருவாய் வந்த மகாத்மா காந்தி இவருக்கு ஆதரிப்பைத் தந்தது யாது தெரியுமா? அஞ்சேல் அஞ்சேலென்று மதுரை மகாநாட்டில் உயிர் கொடுத்தார். மாயூர மகாநாட்டில் இடங்கொடுத்தார். கோவை மகாநாட்டில் சுயநல யாதிகளைத் தொலைக்கப் படையெடுக்க விடை கொடுத்தார். இம்மட்டோடு அவர் வேலை முடிந்ததா? இல்லை, இல்லை.

படையெடுத்துப்போன படை முறியடிக்கப்படாமலும், சுயமரியாதை தோற்றுப்போகாமலும் பார்த்துக்கொள்ள வேண்டியவராயிருக்கிறார். ஆகையால் இத்தனை நாளும் சுயமரியாதை இயக்கத்திலீடுபட்டு வந்த தமிழ் நாட்டு வீரர்கள் உள்ளம் தளர்ந்து விடாமல் வைக்கம் வீரருக்கு பக்கபலமாயிருந்து வருவார்களாக. சமூக சீர்திருத்த விஷயத்தை நல்லுரிமைச் சங்கம் தனியாயிருந்து கவனித்துக் கொள்ள வேண்டும். அரசியலில் காங்கிரஸோடொன்ற வேண்டுமென்று அடிக்கடி வற்புறுத்திவந்த ஸ்ரீமான்களான திரு. வி. கலியாணசுந்தர முதலியார், டாக்டர் வரதராஜுலு நாயுடு முதலியவர்களுக்கு அவர்கள் மனம்போல் கோவை மகாநாடு சரியான வழி திறந்து விட்டிருக்கிறது. பிராமணீயத்தை ஒழிப்பதற்கு வைக்கம் வீரருக்குப் பக்கபலமாய் இனி முன்வருவார்களாக. ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களும், சுயராஜ்யக் கட்சியார் மகாத்மா காந்திக்கு நன்றி மறந்ததுபோல் வைக்கம் வீரருக்கு நன்றி மறந்து விடாமல் சுயமரியாதைப் போருக்குத் துணை செய்வார்களாக. நீண்ட நாட்களாக நம் நாட்டு மக்கள் பழக்க வழக்கங்களுக்கு மாறான பிராமணீயத்தைத் தொலைத்து, சுயமரியாதையைக் காப்பாற்றுவதே நமது லட்சியமென்று கோவை மகாநாட்டில் கூடிக் குலாவியதை எவ்வழிச்செல்லும் பிராமணரல்லாதாரனைவரும் மறந்துபோகாமல் தத்தம் வினையாற்றி வருவரேல் சுயமரியாதைச் சூரியன் தானே பிரகாசமாவன். அன்றி நாட்டத்தில் வென்று விட்டோம்; யார் கேட்டாலுந் தரமாட்டோமென்றதைப் போல் நின்று விட்டால் அதைவிட மானங்கெட்ட பிழைப்புவேறில்லையென்று தான் சொல்வோம்.

ஏழு லட்சம் கிராமங்களும், ஏழு கோடி தாழ்த்தப்பட்ட ஜனங்களும் படும்பாட்டை நினைத்து மகாத்மா காந்தி கண்ணீர் விடுப்பதைக் கவனியாமல் தன்னலம் பேணும் எவ்வியக்கமும் தலைதூக்க முடியாதென்பதை ஒவ்வொரு தலைவரும் கண்டுணர்ந்து தத்தம் வினையாற்றுவார்களாக.

---

# குறிப்புகள்.

### சுதேசமித்திரனும் ஜஸ்டிஸ் கட்சியும்.

கோயம்புத்தூரில் கூடிய தென்னிந்திய பார்ப்பனரல்லாதார் விசேஷ மகாநாடு எக்காரணம் பற்றிக் கூடியதென்பதை நேயர்களறிந்திருப்பார்கள். அது விஷயமாய் சுதேசமித்திரன் அபிப்பிராயம் எழுதும்போது "ஜஸ்டிஸ் கட்சியினர் காங்கிரஸிலும் சேரலாம்; ஜஸ்டிஸ் கட்சியிலும் இருக்கலாம் என்பது விநோதமாகவே இருக்கிறது" என்று எழுதுகிறது. தன்னலம் மாத்திரம் பேணும் எந்த பத்திரிகைக்கும் எந்த ஜாதியாருக்கும் இது விநோதமாகவே தோன்றுவது இயற்கைதானே! ஜஸ்டிஸ் கட்சியார் இதுவரையும் பிராமணரல்லாதார் முன்னேற்றத்திற்காக சென்னை மாகாணம் சம்பந்தப்பட்டவரையும் வேலை செய்து வந்தார்கள். இப்போது இந்தியாவெங்கும் பிராமணரல்லாதாரியக்கத்தை பிரசித்தப்படுத்த, பிராமணச் சூழ்ச்சியை நசுக்கவும் சுயமரியாதையை உண்டு பண்ணி தேச முன்னேற்றத்தை நாட்டவுமே காங்கிரஸில் சேருகிறார்கள். சுயநலப் பித்தர் தலைக்கேறிய பார்ப்பன சுயராஜ்ஜியக்கட்சியாரோ தேசப்பொதுச் சபையாகிய காங்கிரஸை கைவசப்படுத்திக்கொண்டு தங்கள் ஜாதியார் பெரிய உத்தியோகங்களையடைய காங்கிரஸ் மகாசபையை ஏணியாக உபயோகப்படுத்திக்கொண்டதோடல்லாமல் பிராமணரல்லாதாரைக் கீழ்மைப்படுத்தவும் பிராமணரல்லாதாரியக்கத்தை நசுக்கிவிடவும் அதை உபயோகித்தார்கள். இவைகளையறிந்துகொண்ட ஜஸ்டிஸ் கட்சியார் அவர்களின் காங்கிரஸ் கோட்டையைப் பிடிப்பதற்குச் செய்யும் முயற்சியைக் கண்ட சுதேசமித்திரனென்னும் பெயர்வைத்துக்கொண்ட பார்ப்பன மித்திரன் எனக்கு வயிறெரிகிறது என்பதற்குப்பதிலாக விநோதமாயிருக்கிறது என்று எழுதுகிறது. அது எழுதுவதே விநோதமல்லவா? எத்தனையோ பிராமண மிதவாதிகள் காங்கிரஸிலும் மெம்பராயிருக்கவில்லையா? எத்தனையோ மூஸ்லீம் லீக் மெம்பர்கள் காங்கிரஸிலும் மெம்பராயிருக்கவில்லையா? பிராமண சாஸ்திர சபையிலுள்ள எம். கே. ஆச்சாரி போன்றவர்கள் காங்கிரஸில் மெம்பராயிருக்கவில்லையா? இவர்களெல்லாம் மெம்பராயிருப்பது பார்ப்பன மித்திரனுக்குத் தெரியாதா? தெரிந்தும் நமது கோட்டை பிறர்கைவசப் படப்போகிறதே என்ற வயிற்றெரிச்சல் விசேஷத்தால் பார்ப்பன மித்திரனை வாட்டுகிறது. இதற்குச்சான்று வேண்டுமானால் அது எழுதுவதையே இங்கு தருகிறோம்.

> "ஜஸ்டிஸ் கட்சியினர் காங்கிரஸில் சேரும்படி அனுமதி கொடுத்துவிட்டால் ஜஸ்டிஸ் கட்சி கலைந்துபோய்விடுமென்று நாம் பயப்படுவதாக திவான்பகதூர் கிருஷ்ணன் நாயர் விஷயாலோசனைக் கமிட்டியில் சொன்னாராம். அப்படியே நடக்க வேண்டுமென்று விரும்புகிறோம்."

இதுதான் பார்ப்பன மித்திரனின் உண்மைச் சொரூபம். பார்ப்பனரல்லாதாரியக்கம் அழிந்து போவதில் பார்ப்பன மித்திரனுக்குள்ள விருப்பமும் அது நிறைவேறாததாலுள்ள வருத்தமுமே விநோதமாய் நிற்கிறது.

### பார்ப்பனமித்திரனின் அகந்தை.

சுதேசமித்திரன் செவ்வாய்க்கிழமைப் பத்திரிகையில் "நியாயமற்ற அபவாதம்" என்னும் தலைப்புடன் ஒரு உபதலையங்கம் வெளியிட்டிருக்கிறது. கோயம்புத்தூர் மகாநாட்டில் திருவாளர் டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்கள் 2—7—27 சுதேசமித்திரன் தலையங்கத்தில் குறிப்பிட்ட வாசகத்தை மகாநாட்டில் தெரியப்படுத்தியதற்கு மறுப்பாகவே மேற்சொல்லிய உபதலையங்கம் வரையப்பட்டிருக்கிறது. டாக்டர் நாயுடு அவர்கள் பிராமணரல்லாதாருக்கு செல்வாக்கில்லையென்றும் ஆகவே அவர்கள் காங்கிரஸில் சேருகிறார்களென்றும், [illegible] என்றும் சுதேசமித்திரன் எழுதியிருக்கிறதென்று சொல்லியதை உண்மையான தேசீயப் பத்திரிகையாயிருந்தால் உடனே ஒப்புக்கொண்டிருக்கும். வகுப்புப் பெருமைகொண்ட பத்திரிகையானதால் நான் பிராமணரல்லாதாரைச் சொல்லவில்லை; ஜஸ்டிஸ் கட்சியாரைச் சொன்னேனென்று சொல்லவழி நுழைகிறது. ஜஸ்டிஸ் கட்சியில் பிராமணரல்லாதார் இருக்கிறார்களா? அல்லது பார்ப்பனர்கள் இருக்கிறார்களா? என்று பார்ப்பன மித்திரனைக் கேட்கிறோம். ஒன்று மன்னிப்புக்கேட்க வேண்டும்; அல்லது தான் சொல்லியதை சாதிக்க வேண்டும். இரண்டுங்கெட்டானாகப் பதிலெழுதி பிராமணரல்லாதார் கண்ணைத் துடைக்கப் பார்ப்பது அழகல்ல. தமிழ்நாடு பத்திராதிபர் டாக்டர் நாயுடு அவர்கள் அநியாயமாய் அபவாதஞ்செய்தாரா? பார்ப்பன மித்திரன் அநியாயமாய் அபவாதஞ் செய்ததா என்பதை வாசகர்கள் கவனிக்க வேண்டும். பார்ப்பனரல்லாதாருக்கு சுயமரியாதையிருக்குமானால் பார்ப்பன மித்திரனுக்குப் புத்தி கற்பிக்க வேண்டும். பார்ப்பனச் சூழ்ச்சியெல்லாம் இவ்விதமே பார்ப்பனரல்லாதாரைக் கேவலப்படுத்துவதும் யாராவது கவனித்துக் கேட்டால் உன்னையல்ல உன் பாட்டனையென்று ஏமாற்றுவதுமேயாகும். ஆகையால் பார்ப்பன மித்திரன் அகந்தை அடங்க வேண்டிய ஏற்பாடுகளை பார்ப்பனரல்லாதார் உடனே செய்யவேண்டும்.

### காங்கிரஸ் தலைவரின் அபிப்பிராயம்.

பார்ப்பனரல்லாதார் மகாநாட்டுத் தீர்மானங்களைப்பற்றி தமது அபிப்பிராயத்தை திரு. எஸ். ஸ்ரீநிவாசய்யங்கார், பத்திரிகை நிருபரிடம் வெளியிடும்போது "ஜஸ்டிஸ் கட்சியார் இரட்டையாட்சிமுறையில் உத்தியோகம் வகிப்பதில்லையென்றும் காங்கிரஸில் சேருவதென்றும் முடிவு செய்திருப்பது எனக்குப் பெருமகிழ்ச்சியை அளிக்கிறது. அந்நியநாட்டு அதிகார வர்க்கத்துக்கு அரண்போலிருக்க ஒரு கட்சியார் ஆறுவருஷங்களுக்குப் பிறகு இத்தகைய முடிவுக்கு வந்தது மிக்க விசேஷமே. இவ்விதம் அவர்கள் முடிவு செய்ததால் காங்கிரஸின் மதிப்பு அதிகப்பட்டது" என்றும் "பூரணமாக ஜஸ்டிஸ் கட்சி காங்கிரஸில் வந்து கலந்து விடுமென எதிர்பார்த்தேன். ஆனால் அவர்கள் காங்கிரஸுக்குள்ளே தனியான ஒரு ராஜீயக் கட்சியாக இருக்கமுடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது."......என்றுஞ் சொல்லியிருக்கிறார். இதிலிருந்தே திரு. அய்யங்காரின் மகிழ்ச்சியின் எல்லை வெளிப்படுகிறதல்லவா? தாமும் தமது குலத்தாரும் அந்நியஆட்சி நம்நாட்டில் நடைபெற ஆக்கமளித்ததையும் அளித்து வருவதையும் மறந்து பிராமணரல்லாதாருக்கும் உத்தியோகத்திலும் அரசாங்க உயர்பதவிகளிலும் பங்குண்டு என்றும் பார்ப்பனருக்குமாத்திரம் அவைகள் ஏகபோகமானியமல்லவென்றும் பிராமணரல்லாதாரின் பிரதிநிதிகள் ஆறுவருஷம் உத்தியோகம் வகித்தது அந்நிய அதிகார வர்க்கத்துக்கு அரண்போலிருந்ததென்றும் சொன்னால் திரு. அய்யங்காரின் சுயஜாதி அபிமானம் ஞானக்கண்ணை மறைத்துவிடவில்லையா? வகுப்புவாதம் வகுப்புவாதம் என்று பேசுகிற திரு. அய்யங்கார் தமது உத்தியோகத்தை விட்டு எத்தனை வருஷங்களாயின? காங்கிரஸில் சேர்ந்து மஹாத்மா காந்தியடிகளால் கைக்கொள்ளப்பட்ட ஒத்துழையாமையை ஏற்றது திரு. அய்யங்கார் கோஷ்டியாரா? ஜஸ்டிஸ் கட்சியாரா? சட்டசபையில் நுழைந்து அதிகாரவர்க்கத்துக்கு இன்றுவரை திரு. அய்யங்கார் கோஷ்டி கோட்டையாக அமர்ந்திருக்கவில்லையா? இவை [illegible]

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## கோவை மகாநாட்டுக் குறிப்புகள்.

கோயம்புத்தூரில் கூடிய பிராமண ரல்லாதார் விசேட மகாநாட்டுக்கு நாற்புறங்களிலுமிருந்து வந்த பிரதிநிதிகள் சுமார் நாலாயிரம் பேர்களிருக்கலாம்.

பிரதிநிதிகளுக்குத் தங்குமிடமும், சாப்பாட்டு வசதியும் மிகவும் திருப்திகரமாய்ச் செய்து கொடுத்த உபசாரணைக் கமிட்டியார் முயற்சி மிகவும் பாராட்டத்தக்கது.

வாலண்டியர்களுடைய ஒழுக்கமும், அன்பும், வழிவழும் ஒவ்வொருவருடைய உள்ளத்தையும் பரவசப்படுத்தியதென்பது மிகையாகாது.

தலைவர்களுடைய ஊர்வலமும், ஜனங்களுடைய அணிவகுப்பும், வாலண்டியர் தோற்றமும் கண்ட மக்களின் மகிழ்ச்சிக்கோர் எல்லையில்லை.

ஆரம்ப தினத்தில் அரும் பெருந் தலைவர்கள் சொற்பொழிவை பெரு அமைதியுடன் கேட்டிருந்தார்களென்றாலும், நாளைக் கென்ன நடக்குமோ ஏது விளையுமோ வென்ற பெருங் கவலை எல்லோருள்ளத்திலும் எழாமலில்லை.

ஓரிரவு நடந்த விஷயாலோசனைக் கூட்டத்தில் தலைவர்கள் காட்டிய பொறுமை அளவு கடந்திருந்தது. கல்லரவத்திலும் அடிக்கடி வேகமாயெழுந்த குழப்பங்கள் யாவும் திரு. ஈ. வி. இராமசாமி நாயக்கர் வாய் திறந்ததும், பிடாரனைக் கண்ட சர்ப்பம் போல் ஸ்தம்பித்துப்போயின.

ஆரியா அறைந்த வீரவார்த்தைகளாலும், திரு. ராமநாதன் விசேத்தசுவ சரமொழிகளாலும், அதி தீவிரமுள்ள சுயமரியாதை வீரர் துடிப்பினாலும் தலைவர்கள் மனம் கலகலத்துப் போய் ஜாதிக் காங்கிரஸாகப்போய் விடுமோ வெனப் பயந்தார்கள்.

எல்லாக் கொள்கையுள்ள தலைவர்களும் தங்கள் தங்கள் உள்ளங்களிலுள்ளதை ஒளியாமல் வெளியிட்டதானது ஜனங்கள் உண்மை புணர வதுகரமாயிருந்தது.

மகாநாட்டிலும் விஷயாலோசனைக் கூட்டத்திலும் ஜனங்கள் வெகு நுட்பமாய்த் தலைவர்கள் வார்த்தைகளைக் கவனித்தார்கள். எல்லாப் பிராமணரல்லாதாருள்ளத்திலும் பிராமணரல்லாதார் ஒற்றுமைப்படும் விஷயங்களே நிறைந்து நின்றன.

ஸ்ரீமான்கள் ஆர். கே. ஷண்முகஞ் செட்டியார், கலியாணசுந்தர முதலியார், வரதராஜுலு நாயுடு ஆகிய மூவரும் ஜஸ்டிஸ் கட்சியுடன் கலந்து கொண்ட காட்சி வெகு காலம் பிரிந்திருந்த இராமர், லட்சுமணர், சீதா மூவரும் மீண்டும் தம்நாடேறி தம்பி பரதனையும், தம் இனத்தையும் சந்திக்கும் காட்சியாயிருந்தது.

அவ்வமயம் திரு. ஈ. வி. இராமசாமி நாயக்கரவர்கள் உள்ள முருகி உண்மைகளை வெளியிட்டுச் செய்த பிரசங்கமானது பரதன் பக்தியுடன் மூவரையும் வரவேற்று ராஜ்யத்தை அவர்களிடம் ஒப்படைக்கும் காட்சியாகவே காணப்பட்டது.

மூவரும் ஐயங்கார்கள் சட்டசபையிலும், காங்கிரஸிலும் தங்களுக்குச் செய்த கொடுமைகளை விளக்கும்போது இராமர், லட்சுமணர், சீதா அரக்கரால் அடைந்த கஷ்டங்களை விளக்கும் இராமாயணக் கதையாகவே காணப்பட்டது.

சமரசமான முடிவேற்பட்டதும், தலைவர்கள் செய்த பிரசங்கமும் மக்கள் மன வெழுச்சிபொங்கச்செய்து, ஆனந்தக்கடலில் புகுத்தி சர்வானந்தமயம் தந்தன.

இவ்வெற்றுணர்ச்சி ஐயங்கார் கூட்டத்தையும், காங்கிரஸையும் அசைத்துவிடுமென[illegible]

விட்டது. லார்டு கோஷனுக்கும் நடுக்கமெடுத்திருக்கிறது. பிஞமி மந்திரி சபை ஆயுள் முடியுமுன் பாக்கியிடங்களையும் பார்த்துவிடுவோமென்று வேகமாய்ச் சுற்றுகிறது.

பிராமணப் பத்திரிகைகளுக்கெல்லாம் மண்டையடியும், தொண்டை வலியும் கண்டு சற்றே சுதி யிறங்கிப் பாடுகின்றன. ஒத்துழையாரின் மௌனமும், தானமும் சரியாயில்லை. காட்டியமாடும் மூர்த்திக்கு காட்டில் மதிப்பில்லை. ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்காரவர்கள் பிராமணரல்லாதார் சபை காங்கிரஸில் ஒன்றுவதை அச்சத்துடன் அரை மனதாய் ஒப்புக்கொண்டுவிட்டார். ஐயங்கார் அவசரப்பட்டு ஒப்புக்கொண்டது பயங்கொள்ளித்தனமென்று "லீடர்" பரிகாசம் பண்ணுகிறது.

## எப்போதும் இளமையோடிருக்கலாம்.

### நரம்புச் சதைப் பரீக்ஷை.

### ஸ்ரீ வெரோனுப்பின் ஆராய்ச்சி.

"கிழவனைக் குமரனாக்கும் வித்தை" என்ற தலைப்பின் கீழ் சில தினங்களுக்கு முன் நாம் ஒரு கட்டுரை வரைந்திருந்ததை அன்பர்கள் படித்திருப்பீர்களென்றே நம்புகின்றோம். மேதாவியான டாக்டர் வெரோனுப் என்பவர், தளர்ச்சியடைந்த மனிதர்களுக்கு எவ்விதம் புத்துயிரளிப்பது என்பதைக் கண்டுபிடித்து மனித உலகிற்கு ஒரு பேருதவியைச் செய்து வருகின்றாரென, மேற்கூறிய வியாசத்தில் எழுதியுள்ளோம். மனிதர்களைப்போலவே ஆடு, மாடு முதலிய மிருகங்களையும், புஷ்டியுள்ளவைகளாகவும் வியாதிகள் அணுகாவண்ணமும் செய்யலாமென்பதையும் மேதாவி வெரோனுப் கண்டுபிடித்திருக்கிறாரென்றும் சொன்னோம். இது சம்பந்தமான இன்னும் பல விவரங்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன அவைகளை அடியில் தருகிறோம். அன்பர்கள் ஊன்றிப் படிப்பார்களாக.

குரங்குகளுடைய நரம்புச் சதையை யெடுத்து அதை மனித உடலில் புகுத்துவதனால், தளர்ச்சியடைந்த கிழவர்களைக் கூட வாலிபர்களாக்க, டாக்டர் வெரோனுப் முயன்று வெற்றியடைந்தார். சில ஆடுகளுக்கு நரம்புத் தளர்ச்சி காரணமாக உடம்பில் மயிரே யிருப்பதில்லை. ஆடுகளை வியாதி முதலியவைகள் அணுகாமற் காப்பது அவைகள் மீது கம்பளிபோலுள்ள ரோமங்களே. ஒரு நாள் டாக்டர் வெரோனுப், ரோமமே யில்லாத ஒரு ஆட்டைக் கண்டார். அவ்வாட்டிற்கு தன் ஆராய்ச்சி மூலம், அதிக ரோமமுண்டாக்கலாமென அவருக்குத் தோன்றியது. உடனே அவ்வாட்டை தன் ஆராய்ச்சி சாலைக்குக் கொண்டுவந்து சிகிச்சை செய்ய ஆரம்பித்தார். இவ்வாட்டினுடலில் ஒருவித நரம்புச் சதையை புகுத்தியதில் வெகு சீக்கிரத்தில் மெலிந்து இளைத்த உடலில் ரோமமேயில்லாத அவ்வாடு புஷ்டியுள்ளதாகவும், உடல் நிரம்ப அடர்ந்த ரோமமுள்ளதாகவும் ஆய்விட்டது. ஆகவே, மிருகங்கள் மீதும் தன் முயற்சி வெற்றியடைந்து விட்டதென மகிழ்ச்சியும், இனி அநேக ஆடுகளை மிக்கப் புஷ்டியுள்ளதாகவும் வெகு எளிதில் செய்யலாமென்ற நம்பிக்கையும் டாக்டர் வெரோனுப்பிற்கு உண்டாயது. தன்னுடைய ஆராய்ச்சியை அபிவிருத்தி செய்யும்பொருட்டு ஸ்ரீ வெரோனுப் அல்ஜீரியாவிற்குச் சென்றார். இதை சர்க்கார் மூவாயிரம் ஆடுகள்வரை வளர்த்துவருகின்றனர். தன்னுடைய ஞான ஆராய்ச்சியைப் பரீக்ஷிக்கும் பொருட்டு அங்குள்ள எல்லா ஆடுகளையும் டாக்டர் வெரோனுப்பிடம் ஒப்புவித்துவிட்டனர். தன்னுடைய ஆராய்ச்சி முறையைப்பற்றி தெரிவிக்கையில் ஸ்ரீ வெரோனுப் பின்வருமாறு சொல்லுகிறார்:—

#### சில விவரங்கள்.

நான் சென்ற சில மாதங்களுக்கு முன் முதல் தடவையாக அல்ஜீரியாவிற்குச் சென்றிருந்தேன். அப்பொழுது, அங்குள்ள விவசாய சங்கத்திலிருந்த ஒரு கிழக்காளையின்மீது என் வைத்திய முறையைப்பரீக்ஷித்தேன். நான் அதைப் பரீக்ஷிக்கும்பொழுது அதற்கு 16 வயது. அதனுடைய நரம்பில் என் மருந்தைப் புகுத்தியபின், அது இரண்டு வயதுக் காளையைப் போல் துள்ளிக் குதிக்க ஆரம்பித்தது. மிகவும் தளர்ச்சியடைந்திருந்த அக்கிழ எருது, மிகுந்த வலிமையுடன் தன்னினங்களுடன் சேர்ந்து கூத்தாட ஆரம்பித்துவிட்டது. ஆனால், அங்குள்ள இளங் காளைகள், அதைச் சேர்த்துக்கொள்ள மறுத்துவிட்டதால் தனியாகவே வசிக்க நேர்ந்தது. எனினும், அம்மாடு இப்பொழுது பல புஷ்டியுள்ள கன்றுகளை உண்டாக்கியிருக்கின்றது.

இதேமாதிரி பந்தயக் குதிரைகளையும் செய்தால், மிகுந்த பலனையடையலாம். என்னிடம், அல்ஜீரியா சர்க்காருக்குச் சொந்தமான ஆடுகள் ஒப்புவிக்கப்பட்டன வென்று சொன்னேனல்லவா? அவ்வாடுகளினுடலிலுள்ள நரம்புச் சதைகளோடு அதிகமான சதைகளை உள்ளே புகுத்துவது தான் எனது வைத்திய முறை. இதனால் ஆடுகள் புஷ்டி யுள்ளவைகளாகவும், அதிக ரோமமுள்ளவைகளாகவும் வெகு சீக்கிரத்தில் ஆகிவிடுகின்றன. இப்படிச் செய்வது வெகு எளிதெனினும், ஆடுகளினுடலில் நாம்புச் சதையைச் செலுத்துவதில் மிக்க கவனத்துடன் செய்ய வேண்டும். ஆண் ஆடுகளினுடலில் நரம்புச் சதையைச் செலுத்திவிட்டால், அவை பெண் ஆடுகளினுடலுக்குள்ளும்——இரண்டும் சேருமபொழுது—புதிய சக்தி புகுத்திவிடும். எனினும், எல்லா ஆண் ஆடுகளினுடலிலும் நரம்புச் சதையைச் செலுத்துவதென்பது முடியாத காரியம். ஆகையால் பெண் ஆடுகளினுடலிலும், நரம்புச் சதையைப் புகுத்தினால், அந்த சக்தி ஆண் ஆடுகளிடமும் சென்றுவிடும். ஆனால். நரம்புச் சதை புகுத்தப்பட்ட எல்லா ஆண் ஆடுகளும் பெண் ஆடுகளோடு சேருவதால், பிறகும் குட்டிகளுக்கும், முறையே இந்த சக்தி நீடித்து நிற்குமாவென ஒருவர் என்னைக் கேட்டார். அவ்விதம் சேருகிறதாவென சரியாக பரீக்ஷித்துப்பார்க்கும் வரையில் அவருடைய கேள்விக்கு நிச்சயமாய்ப் பதில் அளிக்கமுடியாதென்றே நான் சொன்னேன். எனினும், அல்ஜீரியாவிலுள்ள ஆடுகளுக்கு ஒருவித புத்துயிர் ஏற்பட்டிருக்கிறதெனவே சொல்ல வேண்டும். அவ்வாடுகளின் குட்டிகளும் மிகவும் புஷ்டியாகவும், மயிரடர்ந்ததாகவுமே வளர்ந்து வருகின்றன. இவைகளைக் கண்ணுறும் பொருட்டே, வருகிற அக்டோபர் மாதம் பல ஆங்கிலேயர்கள் அல்ஜீரியாவிற்கு வருவார்களென முன் வியாசத்தில் நாம் குறிப்பிட்டோம். அவர்கள், இவ்வாடுகளைக் கண்டு மிக்க வியப்படைவார்களென்பது நிச்சயம். உலகத்திலுள்ள ஜனங்களில் பெரும்பாலோர் கம்பளிகளை உபயோகிக்கின்றனர். ஆனால் சில தேசங்களிலுள்ள ஆடுகளுக்கு ரோமமில்லாததால், சரியான கம்பளிகள் நெய்வதற்கு முடியவில்லை. உதாரணமாக, பிரான்சு தேசத்திற்குச் சொந்தமாக ஐரோப்பாவில் ஒரு கோடி ஆடுகளும், அல்ஜீரியாவில் ஏறக்குறைய ஒரு கோடி ஆடுகளும், மொராக்கோவில் அறுபது லக்ஷம் ஆடுகளும் இருக்கின்றன. இவ்வளவு ஆடுகளிருந்தும், தங்கள் தேசத்திற்கு வேண்டிய கம்பளிகளை நெய்துகொள்ள முடியாமல், அயல் தேசங்களிலிருந்து கம்பளிகளை வரவழைத்துக் கொள்கின்றனரென்ற செய்தி மிகவும் வருந்தத்தக்கதே.

மிருகங்கள் மூலம் நமக்கு வேண்டிய சாதனங்களைச் செய்துகொள்வதற்கு, சாஸ்திர சம்பந்தமான முறைகள் எத்தனையோ இருக்கின்றன. மிருக உலகத்தை விருத்தியடையச் செய்து, அவைகளை புஷ்டியுள்ளவைகளாகவும், பல முள்ளவைகளாகவும் சாஸ்திர முறைப்படி செய்வதால் மானிட உலகிற்கு அதிகப் பயன் விளைகிறதென்பதற்கு நாம் மேலே கூறியதைவிட வேறு சான்றுகள் தேவையில்லை. அவ்விதம் நாம் செய்தால், ஆகாய விமானங்களில் பறந்து செல்வோரைக் காட்டிலும், நமக்கு பன்மடங்கு புகழும், சீர்திருத்தமுண்டாகுமென்பதற்கு ஏற்றும் ஐயமில்லை (த. நா.)

## மதிப்புரை.

### மச்சமுனிவன் சரிதை—பக்திரச மாலை

எனும் சுவடியொன்று நமது பார்வைக்கு வாய்ப்பெற்றோம். இது பைபிளின்பழய ஏற்பாட்டில் கடைசியாகக் காணப்படும், மீனால் விழுங்கப்பட்டு மீண்டுங்கரையேறி ஜனோபகாரமாக உபதேசம் செய்த பெரி (மச்சமுனி) யாரின் சரித்திரமாகும்.

வேதாகம சரித்திரங்களை பக்த பாகவதர்களுக்குக் கீர்த்தன வடிவமாக அமைத்துக் கொடுப்பது வித்துவான்கள் கடமைகளிலொன்றாகும். தற்காலத்தில் பெரியார் சரித்திரங்கள் வசன ரூபமாகவும் செய்யுள் வடிவமாகவும் பல விருந்தாலும் சங்கீதவழியில் இன்னும் அதிகம் வெளிவரவில்லை. கிறிஸ்து உபதேசங்களும் பைபிளிலுள்ள பல பெரியார் சரித்திரங்களும் இந்துக்களும் எளிதில் படித்துணரும் சங்கீதமாலைகள் பல வெளிவரவில்லை. இக்குறைபாடுகளை நிவர்த்திக்க வேண்டியது கற்றவர்கள் கடன்.

இப்பெரும் நோக்கங்கொண்டே "சுதேசமித்திரன்" இலங்கைநிருபரும், "நாடார்குலமித்திரன்" அத்யந்த நண்பருமான ஆவரைக்குளம் ஸ்ரீ ஞா. பா. வேதநாயகம் அவர்கள் இச்சரித்திரத்தை இன்னிசை பொருந்திய பலவர்ண மெட்டுகளுடன் எல்லோரும் படிக்கத்தக்க பாவனையாய் பக்திரச மாலையைப் பாடியிருக்கிறார். முனிவருடைய சரித்திர முழுதும் தெளிவாய் அமைக்கப்பட்டிருக்கிறது.

டோர்னக்கல் ஸ்ரீலஸ்ரீ மகாகனம் அத்தியக்ஷகுரு (சமீபத்தில் 7-வது நாடார் மகாநாட்டில் கௌரவ அக்கிராசனம் வகித்தவர்) அசிரியாதிட்ட சதாவர்களின் அருமையும் அன்புமுள்ள முகவுரை இந்நூலுக்குக் கிடைத்திருப்பதால் நூலின் பெருமையைப்பற்றி நாம் அதிகம் எழுதவேண்டியதில்லை. பஜனை பண்ணுகிறவர்களுக்கும் பாகவதர்களுக்கும் மிகவும் பிரயோஜனமாயிருக்கும்.

விலை அணா 4.

விலாசம்;—ஞா. பா. வேதநாயகம், ஒய். எம். சி. ஏ., கொழும்பு.

கிறிஸ்து மத புத்தகசாலை,
பூந்தோட்டத் தெரு.
கொழும்பு.

## அரிய வுரைகள்.

மனிதன் தற்போதிருக்கும் நிலைமையைக் காட்டிலும் மேம்பட்ட நிலையில் இருக்க வேண்டுமென்பது நமது விருப்பம். அன்பு, வலப்பு, மகத்துவம், உண்மை முதலியவற்றினிடத்துப் பற்றுக் கொண்டிருக்க வேண்டுமென்பதும், அவன் பின் பற்றும் கொள்கை பரிசுத்தமானதாகவும், தெய்வீகம் பொருந்தியதாகவும் இருக்க வேண்டுமெனபதாம். அவன் தனது தன் மதிப்பை பெரிதாகக் கருத வேண்டுமென்பதும், அழிவில்லாத் தனது ஆன்மாவைக் கௌரவிக்க வேண்டுமென்பதும் நமது விருப்பம்.

—ஸ்ரீ மாஜினி.

எனது கருத்தெல்லாம் குழந்தைகள் மீது தான் இருக்கிறது. வருங்கால மேன்மை இன்றை குழந்தைகளாயிருப்போரையே பொறுத்திருக்கிறது.

—ஸ்ரீ முஸோலினி.

நான் பிரமச்சாரிகளுக்கென்று ஒரு வரி போட்டு அதன் வருவாயைத் தாய்மார்கள், குழந்தைகளின் நலத்திற்கென்று செலவு செய்ய வேணுமென்று உத்தரவிட்டபோது உலகம் சிரித்தது. ஆனால் தற்போது எனக்கு ஸ்திரீகள் கோயில் கட்டிக் கும்பிடத் தயாராயிருக்கிறார்கள்.

—ஷியார்.

குணமோடு பழகாத
மடையர்க்கு வம்புவாய்க்
[illegible] வு.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

[2-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

பொருந்தவே பொருந்தாத சுயராஜ்யம் அந்தால் அவர்களுடைய ஏக போக அனுபோக மெல்லாம் தொலைந்துவிடும்.

ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்களைத் தெரியாதவர் இங்கு யாருமில்லை. அவர்கள் பலநாள் பழகியதால் காங்கிரஸ் தலைவர் ஐயங்கார் அவர்களை நன்கறிந்தவர். செட்டியார் அவர்கள் சில நாட்களுக்கு முன் நமக்கு எடுத்துக் கூறிய தென்னவென்றால், "தன் இனம் மாத்திரம் வாழ வேண்டுமென்று எண்ணுவதில் ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்கார் அவர்களுக்குச் சமமானவர் சென்னை மாகாணத்தில் யாருமே இல்லை என்று உறுதி கூறுவேன்" என்றார்கள். இந்த ஐயங்கார் தான் பிராமண சிகாமணி. ஆகவே, ஒரு இனத்தின் ஆதிக்கம் கூடாதென்று சொல்லி ஜாதிய சமத்துவம் வேண்டும் என்று விரும்பும் நாம் இனப்பேய் பிடித்தவர்களா? அல்லது ஒரு இனத்தின் ஆதிக்கம் இருப்பதில் ஆனந்தம் கொண்டு அதை என்றென்றும் நிலைநிறுப்பதற்காக வெறிகொண்டாற்போல அங்கு மிங்கும் ஓடித்திரிந்து கொண்டிருக்கிற அவர்கள் இனப்பேய் பிடித்தவர்களா? என்று பாருங்கள்.

சுயராஜ்யக் கக்ஷியார்கள் தங்கள் சொற்படி இணங்கிவருகிற சுயேச்சைக் கட்சியினரை வாய்த்த கருவியாகக் கொண்டு ஆறு மாதகாலமாக ஆட்சி புரிந்துவருகின்றனர். இந்த ஆறு மாதகாலத்தில் தான் இதற்கு முன் என்றுமில்லாதபடி பார்ப்பனர்க்கும் பார்ப்பனரல்லாத ஏனையோர்க்கும் இடையே மனக்கொதிப்பு அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. இரு இனத்தாருக்கும் இடையே உள்ள பிளவு இப்போதிருக்கிறபடி இதற்கு முன் எக்காலத்தும் இருந்ததில்லை. இம்மாகாணத்தில் பார்ப்பனர்க்கும் ஏனையோருக்கும் இடையே உள்ள பிளவை காங்கிரஸ் தலைவர் ஏதோ தீர்த்து விட்டதாகச் சொல்லி வடக்கே தூர தேசத்திலுள்ள காங்கிரஸைச் சேர்ந்த ஒரு மகமதியரை ஏமாற்றலாம். ஆனால் இந்நாட்டிலேயே உயிர் வாழ்ந்து தினம் தினம் கஷ்டத்திற்கெல்லாம் ஆளாயிருக்கிற நமக்கு அவரும் அவருடைய சார்பாரும் சாதித்ததெல்லாம் தெரியும். அவர்களுடையபெரும் முயற்சியின் பலனாய் சித்தித்தது ஒன்றே. முன்னிலும் பன்மடங்காய்ப் பெருகியது நமக்கும் அவர்களுக்கும் உள்ள ஜாமம்.

"தேசிய ஒற்றுமைக்கென்றே உடலெடுத்து வந்த இந்த அவதார புருஷர்" ஸ்ரீமான் ஸ்ரீநிவாசயங்கார் ஒற்றுமைக்காகச் செய்யும் வேலையைத் தன் தமிழ் நாட்டிலேயே ஆரம்பிக்கக் கூடாதா? ஸ்ரீமான் ஷண்முகம் செட்டியாரவர்கள் எடுத்துக் காட்டியபடி சென்னை மாகாணத்திலுள்ள சாமான்ய ஜனங்களுக்கு வடக்கேயுள்ள இந்த மகம்மதியப் போராட்டம் இன்னதென்று தெரிய முடியாது. அதே மாதிரி வடக்கேயுள்ளவர்களுக்கு இங்குள்ள பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் இவர்களுடைய போராட்டத்தின் தன்மை இன்னதென்று தெரியாது. ஆனால், நமக்கோ அது எவ்வளவு அபாரமானதென்று நன்கு தெரியும். இதை காங்கிரஸ் தலைவரே முன் ஒரு சமயம் உணர்ந்து நம்முடைய பிளவை தீர்த்துவிடுவதே தன் முதல் வேலை என்று சொல்லியிருக்கிறார் இப்போது ஏன் அதை அவர் புறக்கணிக்கின்றார்? அதற்குக் காரணம், இப்போது பார்ப்பனச் சக்கிரம் உச்சத்திலிருப்பதாய் எண்ணியோ? அது என்றும் உச்சத்தில் இருக்க முடியாதென்று அறியாரோ? பார்ப்பனரல்லாதாரைச் சிறிது காலத்திற்கு ஏமாற்றலாம்; ஆனால், என்றென்றும் ஏமாற்ற முடியாது. இந்த மாகாணத்தில் இப்போது ஆட்சி புரிந்து வருகிற பார்ப்பனரல்லாத மந்திரிகள் உண்மையில் பார்ப்பனருடைய கையாளாக இருந்து வருகிறார்கள். ஆனால் இவர்களும் என்றும் பார்ப்பனக் கொடுமையைப் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது. அவர்களும் கிளம்பி விடுவது நிச்சயம். இத்தகைய நுவ்வாத நட்பெல்லாம் நம் பகையாய் வெகு சீக்கிரத்தில் ஒழியப் போகிறது. உத்தியோகத்திலிருக்கிற [illegible] அடிமைகளை [illegible] பனர் சித்திரவதை செய்து இணங்கிக் கொண்டே யிருக்கலாம் என்பது முடியாத காரியம்.

சுயராஜ்யக் கட்சித் தலைவருக்கு உள்ளதை உள்ளவாறு காண விருப்பமிருக்கிறதாகத் தெரியவில்லை. இனப்பேய் சங்கலையே மிகவாக ஆட்டிக் கொண்டிருக்கப் பிறர் அதற்காளாகியிருக்கின்றார்கள் என்று சொல்வது உண்மையோ? இனப் பேய் முன்னிலுமதிக ஆவேசத்தோடு அவர்களைப் பிடித்துக் கொண்டிருக்க அது இறந்து ஒழிந்து விட்டதென்று சொல்வது முறையோ? சுயராஜ்யக் கட்சித் தலைவர் நாணயஸ்தராகில அவர் செய்ய வேண்டுவது என்னவென்றால், உள்ளதை உள்ளபடி கண்டறிந்து அதற்குத் தக்கபடி பரிகாரம் தேட வேண்டியதே யொழிய, பூனை தன் கண்ணை மூடிவிட்டால் உலகமே அஸ்தமித்துப் போய்விடுமென்று எண்ணும் கதை போல உண்மையைப்பார்க்கக் கண்ணைத் திறவேன் என்றிருப்பதல்ல. காங்கிரஸ் தலைவர் தன் மாகாணத்துக் காரியங்களை ஒழுங்கு படுத்தி விட்டல்லவா புறநாட்டைத் திருத்த பவனி போகவேண்டும். சோற்றிலிருக்கிற கல்லை எடுக்கமுடியாதாம்; சொக்கநாதர் கோவில் வரிக்கல்லை எடுத்துவிடப் போகிறாராம். என்ன விந்தை!

## உடைந்துபோன சென்னை சுயராஜ்ய நீர்க்குமிழி

சுயராஜ்யக் கக்ஷியாருடைய புராணத்தை இனி யாராவது பாடினால் சென்ற 1926-ஆம் நவம்பர் மாதத்திய தேர்தல் ஆரம்பித்ததிலிருந்து அவர்கள் செய்தன்ன செயல்கள் தான். "மாபாதகம் புரிந்த படல" மாகும். தேர்தல் காலத்தில் இந்த அரசியல் புரட்டர்கள் [illegible]ராய் ஓடி ஏதோ தாங்கள் உடல், பொருள், ஆவி, இவைகளை யெல்லாம் அர்ப்பணம் பண்ணுபவர்கள் போலவும் தாங்கள் சம்ஹார கர்த்தாக்கள் என்றும் முழங்கிக்கொண்டு திரிந்தார்கள். ஆனால், உண்மை நமக்குத் தெரியும். அரசியல் சார்பு சிறிதுமற்ற பலபேருதவிகளை அவர்கள் பெற்றதும் பெரும்பணம் வீணுக்குக் கிடந்துள்ள இடங்களிலிருந்து அவர்களுக்கு பணஉதவி கொள்ளை கொள்ளையாய் வந்ததும் சந்தியெல்லாம் சிரிப்பு. இவ்வுதவிகளே அவர்களுடைய வெற்றிக்குப் பெருங்காரணமாயிருந்தது ஒரு புறமிருக்க, வெளிப்படையான கொள்கைகளை ஆரவாரத்தோடுப்பிரசாரம் செய்ததினால் ஜனங்கள் ஏமாந்து போனதும் ஒரு காரணம். தங்களுக்குத் தாங்களே சுயராஜ்யக்கட்சியர் என்று ஒரு நாமகரணம்சூட்டிக் கொண்டார்கள். அது ஒரு தந்திரம். மற்ற கட்சியாருக்கு சுயராஜ்யத்தில் நாட்டம் இல்லையென்று ஏற்படுகிறதாம். இதையே எடுத்தெடுத்து பாமர ஜனங்களுக்கு பறையடித்து வந்தார்கள். பலவாண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட தமிழ்நாவல் ஒன்றில் உள்ள சிறு கதையை இவர்கள் செய்கை ஞாபகப்படுத்துகிறது:— அந்நூலின் கதாநாயகருக்கு ஒரு மகளிருந்தாள். அவள் பெயர் கல்யாணி. அவளுக்குக் கல்யாணமாகப் பருவம் வந்தபோது அவருடைய மனைவி ஒரு வரனைத்தேடிக் கல்யாணத்துக்கு ஏற்பாடுசெய்யும்படியாக அவரைக் கேட்டாள். அதற்கு அவர், நமது மகளே "கல்யாணி;" அவளுக்கு எதற்குக்கல்யாணம்? என்று பதில் சொன்னார். அதற்கு மனைவி "உலகம் என்ன பயித்தியம் பிடித்த உலகமாயிருக்கிறது கலியாணங்களினெல்லாம் எவ்வளவோ சிரமம், எவ்வளவோ பணச்செலவும் ஏற்படுகிறது. இவை எல்லாம் வீண்தானே. பெண்குழந்தை பிறந்தவுடன், கல்யாணி என்று ஒவ்வொரு வீட்டிலும் பேர் இட்டு விடக்கூடாதோ?" என்று சொன்னான். நம்முடைய சுயராஜ்ய நிபுணர்களுக்கும் கலியாணியின் தந்தையாருக்கும் என்ன வித்தியாசம்? அவர்கள் இந்தப் பகட்டானபெயர் கொண்டு உலகத்தை எப்போதும் ஏமாற்றிக் கொண்டிருக்க இயலாது.

சுயராஜ்யமென்று எழுதித் தங்கள் நெற்றியில் ஒட்டிக்கொண்டு என்ன வந்தாலும் சரி, இருதலை ஆட்சியை ஒழித்துவிடுவோம் என்று வெளிக் கிளம்பினார்கள். மந்திரிகள்யாரும் வர [illegible] நம் ராட்சஸத் துரைத்தனம்தொலைந்தே போகுமென்றும், நமது உலகம் தேவலோகம் ஆய்விடுமென்றும் பல பலவாறு முரசடித்துக் கொண்டு திரிந்தார்கள். ஏதோ தாங்கள் துரைத்தனத்தாரை தும்சம்செய்து போடுவதாகச் சொல்லிய பொய்யாரவாரம் ஜனங்களை ஒருவாறு மயக்கியது. கொடுங்கோல் நடத்தும் வெள்ளையர்களும் அவர்களுக்குத் துணையாய் நிற்கும் மந்திரிகளும் ஒழிந்துபோய் அவர்களுக்குப் பதிலாக தர்மபுத்திரர்களே அவதரித்து வந்து விடுவார்கள் என்று கூறினார்கள். ஜனங்கள் தங்களைத் தேர்ந்தெடுத்து விடவேண்டியது என்று தான் உடனே ராட்சஸ இனத்தைச் சேர்ந்த அதிகாரவர்க்கத்தினர் வெள்ளையாளானாலும் சரி இந்தியரானாலும் சரி அவர்கள் மேல் பாய்ந்து அவர்களைக் கொன்று பக்கத்திலிருக்கிற கடலிலே போட்டு ஒழித்துவிடுவதாகச் சொன்னார்கள். இப்படி யெல்லாம் பத்திரிகைகளில் எழுதினார்கள். பிரசங்க மேடைகளிலிருந்து முழங்கினார்கள். தேர்தலுக்காக வெளியிட்ட விளம்பரப் பத்திரங்களிலும் தடபுடலாய் எழுதினார்கள்.

தங்களுடைய தேர்தல் சமயத்தில் ஜஸ்டிஸ் கட்சியாரை நிர்மூலம் செய்வதுதான் உலகத்தில் தங்களுக்கு பிரம்மன் விதித்தவேலையென்று அவர்கள் எப்போதாவது சொன்னதுண்டா? அப்படிச் சொல்லியிருந்தால் அவர்களுடைய இனப்பற்று நன்றாய் வெளியாயிருக்கும். மந்திரிகள் ஜஸ்டிஸ்கட்சியைச் சேர்ந்தவராயிருந்தாலும் சரி வேறு கட்சியைச் சேர்ந்தவர்களானாலும் சரி முற்றிலும் பார்ப்பனராகவேயிருந்தாலும் சரி அவர்களைத் தொலைப்பதற்காகவே தாங்கள் கங்கணம் கட்டிக் கொண்டிருப்பதாய் கடித்தார்கள். மந்திரிகளைக் கடித்துத் தின்று விட வேண்டுமென்ற ஆத்திரத்தில் யாராயிருந்தாலும் சரி என்றார்கள். யாராயிருந்தாலும் அவர்களையெல்லாம் ஒரே கவளமாய் விழுங்கி விடுவதாக ஆரவாரம் செய்தார்கள். ஜஸ்டிஸ் கட்சியார் எவ்வளவு சொல்லியென்ன? சுயராஜ்யக் கட்சியாருடைய புனிதவாயிலிருந்து பிறக்கும் ஒரு வார்த்தைக்கு சமானமாகுமா? ஆனதால் அவர்களுடைய வாக்குகளையே மேற்கோளாய்க் கொள்வோம். தேர்தல் முடிந்ததும் வெற்றிகொண்ட வெறியில் தேர்தல் விஷயமான பிரதிக்ஞைகள் ஞாபகத்தை விட்டு விட்டு அகலாதிருந்த நிலையில் காங்கிரஸ் தலைவர் தன்னுடைய சம்ஹாரதத்துவத்தை வெளியிட்டார். அவர் சொன்னதாவது:—

"ஜஸ்டிஸ் கட்சி மேல் ஜனங்களுக்கு ஏற்பட்ட விரோதத்தினால தான் காங்கிரஸ் கட்சிக்கு இத்தகைய என்றும் இல்லாத உயரிய வெற்றி கிடைத்ததென்று சிலர் எண்ணியிருக்கலாம். உண்மையில் இவ்வெற்றிக்குக் காரணமாயிருந்தது காங்கிரஸினிடத்திலும் ஜனங்களுக்கு ஏற்பட்டுள்ள பக்தியே யொழிய வேறில்லை. இந்த நாட்டில் சுயேச்சைக் கொள்கையினர் தாங்கள் சேர்ந்து ஒரு கட்சியாகலாமென்று எண்ணினால் அவர்கள் அந்த எண்ணத்தை விட்டுவிட வேண்டும். ஏனெனில் சுயேச்சைக் கொள்கையினர் தனித்தனி சிதறிய நிலைமையில் ஒன்றுசேருகிறதாவது ஒரு கட்சியாய் ஆகிறதாவது முடியாத காரியம். ஆகையால், காங்கிரஸ்கட்சியில் அவர்கள் உடனே வந்து சேரவேண்டுமென்று நான் சொல்லுகிறேன். தாங்கள் சுயேச்சைக் கொள்கையினர் என்று எண்ணினால் அது முற்றிலும் தவறு. காங்கிரஸ் சார்பாரின் தேர்தல் பிரதிக்ஞைகள் ஒவ்வொன்றையும் நான் இவ்விடம் மறுபடி எடுத்துக் கூறுகிறேன். வெற்றிக்குப் பிற்தான் அவைகள் வலியுறுத்தப் படவேண்டியது அவசியம். ஜனங்களிடத்திலிருந்து வாக்குரிமைகளை ஓட்டுகளைப் பெற்றுக்கொண்ட பிறகு ஜனங்களுக்கு விரோதமாகத் திரும்பி குட்டிக்கரணம் போடுகிறவர்கள் நாமல்ல" என்றும் சொன்னார்.

இதற்கடுத்து இரண்டொரு நாள் கழித்து அவர் மேலும் சொன்னதாவது:- "சில மணி நேரத்திற்கு முன் நான் மற்றத் தலைவர்களையும் கலந்து கொண்டு தங்களுக்கு மந்திரி பதவி வேண்டாமென்று கவர்னர் அவர்களிடம் சொல்லிவிட்டேன். ஜஸ்டிஸ்கட்சியாருக்கு மந்திரி பதவி கொடுத்தாலும் கவலையில்லை. நம் நாட்டிற்குச் செய்ய வேண்டிய கடமையை ஒரு விதஇடையூறுமின்றி நிறைவேற்றி வருவோம். எப்படியாவது மந்திரி ஆட்சியை இல்லாமல் ஆக்கிவிடுவோம் என்றெல்லாம் கவர்னர் அவர்களுக்கு மனதில் பதியும்படியாக எடுத்துக் கூறிவிட்டேன்" என்றார்.

ஸ்ரீமான் காங்கிரஸ்தலைவர் இவ்வாறு சொல்லியிருக்கிறார். சுயராஜ்யக்கட்சிக்காரருடையசொந்தப் பத்திரிகை என்று சொல்லக்கூடிய "இந்து" பத்திரிகை என்ன சொன்னதென்று தெரிய வேண்டாமா? நவம்பர் மாதம் 17 உ பின்வருமாறு கூறியது!—

உத்தியோக பதவியை ஒப்புக் கொள்ளக் கூடாது என்பது தேசத்து அறிவாளிகள் எல்லாம் கூடி விதித்த விதி. அந்த விதியை மாற்றுவதற்கு அவர்கள் கூடிய கூட்டம் ஒன்றிற்கே அதிகாரம் உண்டு. வேறு எவ்விதத்திலும் அந்த விதியை மாற்ற முடியாது. சென்னை கவர்னர் அவர்கள் ஜஸ்டிஸ் கட்சியாரில் மிஞ்சியுள்ள சேஷத்திலிருந்தேனும் சரி, அல்லது வேறு எவ்வாறாயினும் சரி மந்திரிகளைத் தெரிந்தெடுப்பாராயின் காங்கிரஸைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு வழிதானிருக்கிறது. அது இன்னதென்று அவர்களுடைய தேர்தல் விளம்பரப் பத்திரிகையில் சூரியப் பிரகாசம் போல் காணப்படுகிறது. அதாவது இருதலை யாட்சியாகிய ஓடாத இயந்திரத்தை மாற்றுவதற்கு இட்டு ஓட்டுவதற்காக அல்ல காங்கிரஸ் கட்சியார் சட்டசபையிலிருப்பது. ஆனால் பொதுஜனங்களுடைய நன்மையை பாதுகாப்பதற்குரிய வீரர்களாம். அவர்கள் அங்கேயிருக்கிறார்கள். அவர்கள் இந்தக் கட்சி அந்தக் கட்சி யென்று ஒன்றும் கருதாது ஜனசமூகத்தின் நன்மை ஒன்றையே கருதி காரியாதிகளை நடத்திவர வேண்டும். காங்கிரஸைச் சேர்ந்தவர்கள் துரைத்தனத்தை எதிர்க்கும் பலத்த சக்தியாக அமைய வேண்டும். எதிராளிகள் எளிதாகத் தெரியும்படியான பழைய கட்சியாயிருந்தாலும் சரி புதுப்பெயர்புனைந்து மாறுவேடம் போட்டுக்கொண்டு இருப்பவர்களாயிருந்தாலும் சரி அவர்கள் காரியம் செல்ல ஒட்டாதபடி எதிர்க்கத் தயாராயிருக்க வேண்டும்."

காங்கிரஸ்தலைவரும் இந்து பத்திரிகையும் இவ்வாறு கூறியதானது கிடையாத வெற்றி தங்களுக்குக்கிடைத்து விட்டதென்று மெய்மறந்து போன காலம். அவர்கள் அன்றிரவு தம் வசத்திலிருந்தால் அவர்களுடைய தேர்தல் பிரதிக்ஞைகள் விஷயத்தில் இவ்வளவு ஆவேசத்தோடு பேசியிருக்கமாட்டார்கள். ஆனால், பின் செய்ய வேண்டிய புரட்டுகளை யெல்லாம் முன் கூட்டி அறிந்து கொண்டு மௌனம் சாதிப்பார்கள்.

இவ்வளவெல்லாம் கம்பீரப் பேச்சு பேசிவிட்டு அதற்கு மாறாகச் செயல் புரிவதற்கு ஸ்ரீமான் ஐயங்காருடைய துணிபுதான் என்ன! ஜனங்களிடத்திலிருந்து வாக்குரிமை (ஓட்டு) பெற்றுக்கொண்ட பின் அதமாகச் செய்த சத்தியங்களுக்கெல்லாம் விரோதமாக நின்று குட்டிக்கரணம் போடுவதில் அவரைப்போல சமர்த்தராக்கண்டிருப்பீர்களா? புதுப்பெயர் புனைந்து மாறுவேடங்கொண்டு மந்திரிமார்கள் ஏற்படுத்தப்பட்டார்கள். அவர்கள் இந்த வீரர்களுடைய உதவியைக் கொண்டே பதவிக்கு வந்தார்கள் என்பது இப்போது வெட்டவெளிச்சம். இவர்கள்தான் அதிகார வர்க்கத்தினரை எதிர்ப்பதாகவுள்ள வீரர் என்று சில நாளைக்கு முன் உலகத்தார் அதிசயிக்கும்படி எடுத்துக் காட்டப்பட்டார்கள்.

(இன்னும் வரும்.)

---

கபடக் காரியங்களெல்லாம்
அற்ப ஆயுளுள்ளனவே.

ஞாயக்காரர்களைக் கண்டால்
நடு நடுங்கி மடியும்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## தேவை.

டிம்மி சயிஸ் பவர் பிரின்டிங் மிஷன் பழய விலைக்கு தேவை. விலை விபரத்துடன் பத்திராதிபர் "நாடார் குல மித்திரன்" அருப்புக்கோட்டை என்ற விலாசத்திற்கு எழுதவும்.

## இரவில் மணிபார்க்கும் ரேடியம்ரிஸ்லெட்கெடியாரம்



இந்தக் கெடியாரத்தில் இரவில் எவ்வளவு இருட்டாயிருந்தாலும் விளக்கு வெளிச்சமில்லாமல் மணி நன்றாய்த் தெரியும். கையில்கட்டும் தோல்பட்டையுடன் விலை ரூ 6-8-0.

விலாசம்:— கனக மண்டு கம்பெனி, பார்க்டவுன்போஸ்ட், மதராஸ்

## "1000 தொழில் முறைகள்."

சலவைசோப், இங்கி, மெழுகுவர்த்தி, இரசாயனம், சர்பத்து, செயற்கை தங்கம், கண்ணாடியை ஒட்டும் செலுலய்ன், பெப்பர்மெண்டு, ரசம் பூசுதல், தக்கிலிட், சிகரெட்டு, நிக்குசனி, ரோசம்ஹோரி, அத்தர், பற்பொடி, கேசமயிர்களுக்குத் தைலம், வீரியவிர்த்தி மாத்திரை, தேள் விஷ சஞ்சீவி, அஞ்சனம் முதலிய 1000 அபூர்வ செய்முறைகள் அடங்கிய பெரிய புத்தகம் ரூ 4-0-0. வி. பி. வேறு. தனி விபரப் புத்தகம் இனும்! ஏமாந்துபோகவேண்டாம். இப் பெரிய புத்தகத்தின் முக்கிய முறைகளடங்கிய "200 தொழில் முறைகள்" என்னும் புத்தகம் 210 பக்கங்கள் உள்ளது ரூ 1-0-0 தான். இவர் ஐயோரப் போலிமுறைகளை ரூ 1½ 2 என்று விற்பனைப்பார்த்து ஏமாந்துபோக வேண்டாம். எமது கைத்தொழில் புத்தகங்களின் கேட்லாக் இனும்!

ஆர்ட் புக்ஸ் கம்பெனி, 13. திருச்சினாப்பள்ளி.

## ஏமாந்துவிடாதீர்கள்! உடனே எழுதுங்கள்!!

உங்கள் நன்மையைக் கோரிவுதயமான

# இரங்கூன் இரகசியம்.

### (ஓர் இனிய தமிழ் நாவல்.)

200-பக்கங்கள்; அழகான ராப்பர் பைண்டு செய்தது. விலை ரூபாய் 1—0—0. வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்.

## பால்யநாடார் சங்கப்பாட்டு.

நாடார்குல மக்களின் நலத்தைக்கோரி தற்கால நவீனமுறையில் எழுதியது. 70 பக்கங்கள், இரண்டு ஆப்டோன்படங்கள் உள்ளன. விலை அணா 0—8—0. சொற்பப்பிரதிகளே கைவசம். ஆர்டருக்கு முந்துங்கள்.

| கொழும்பு ஏஜென்ஸி:— | விலாசம்:— |
|---|---|
| ரஞ்சிதமனோகர புத்தகசாலை, | பஞ்ச சக்தி புத்தகசாலை, |
| 53. செட்டி தெரு, | 68 நெ. 29-வது வீதி, ரயில்வே பிளாக், |
| கொழும்பு. | தபால் பெட்டி நெ. T 1051. இரங்கூன். |

## பச்சையிலைத் தைலம் கம்பெனி,

பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.

# குஷ்டம் தீர்ந்தபடம்.

குஷ்ட வியாதியுள்ளவரை முன்னதாகப் புகைப்படம் எடுத்து எங்கள் குஷ்டரோக நிவாரண எண்ணெயை கொடுத்து அந்த வியாதியை சொஸ்தப்படுத்தி, மறுபடியும் புகைப்படம் எடுத்து வைத்திருக்கிறோம். குஷ்டரணம், குழிப்புண், படை, திமிர், மொச மொசப்பு யாவும் நீங்கி விட்டதை அப்படத்தில் நன்றாய் அறியலாம். உங்கள் விலாசத்தைத் தெரிவித்தால் அப்படத்தை அனுப்புகிறோம்.

குஷ்டரோக நிவாரண எண்ணெய் 20-நாள் புட்டி 1-க்கு ரூபா 20.
" " 40-நாள் " ரூபா 40.



### சர்வரோக நிவாரணி

## பச்சையிலைத் தைலம்.

வெள்ளை, வெட்டை, கிரந்தி, சொருக்கு, விரைப்புற்று, யோனிப்புற்று, கன்னப்புற்று, கபாலபுற்று, அரையாப்பு, தடைவாழை முதலிய கொடிய நோய்களை (ஆப்ரேஷன்) அறுத்து கஷ்டப்படாமல் ஆச்சரியப்படும்படி ஆற்றிவரும் கைகண்ட மருந்து பச்சையிலைத் தைலம்.

மேக சம்பந்தத்தாலுண்டாகும் எலவ வியாதிகளையும், ரணங்களையும், ராஜப்பிளவையையும், வாதசம்பந்தத்தாலுண்டாகும் கைகால் வீக்கம், குத்தல், குடைச்சல், அஷ்டவித குன்மங்கள், குதாச்சயம் நீவகாத வயிற்றுவலி முதலிய சகல வியாதிகளையும் சூரியனைக்கண்ட பனிபோல் நீக்குவது பச்சையிலைத் தைலம்.

சாப்பிடுவதற்கும் கஷ்டமின்றி காப்பியில் துளிக் கணக்காக விட்டு சாப்பிடக்கூடியது பச்சையிலைத் தைலம்.

பெண்கள் சேயான் அவஸ்தைப்பட்டு (ஆப்ரேஷன்) அறுத்துச் சதமறுபடியும் இனமயிக் கஷ்டப்பட வேண்டியதில்லை. உடம்பிலுள்ள ரத்தத்தைச் சிந்தாமலே அசிங்கமாயிருக்கும் கசத்திரியாமல் பறக்கடிக்கக்கூடியது எங்கள் பச்சையிலைத் தைலம் என்பதைப் பக்ஷமாகச் சொல்லுவோம். உங்களுக்கு மருந்து சாப்பிடாமல் ஆரா மேக வியாதி அறவே நீங்காது. ஆப்ரேஷன், இஞ்சக்ஷன் முதலிய சிகிச்சைகளால் உபசாந்தியானாலும் மீண்டும் கஷ்டப்படுவீர்கள். ஆகையால், நமது தமிழ்நாட்டின் யோகீஸ்வரர்களில் ஒன்றாகிய மூலிகைகளால் சாஸ்திர முறைப்படி தயார் செய்யப்பட்ட பச்சையிலைத் தைலத்தைச் சாப்பிட்டு வியாதியை அறவேயொழித்து சுகத்தையடையுங்கள்.

7-நாள் சாப்பிடக்கூடிய தைலம் புட்டி 1-க்கு ரூபா 5-0-0. வி. பி. தபால் சார்ஜ் 0-6-0. பினாங்கு, சிங்கப்பூர், மலாய் நாடுகள், செட்டால் தென்னாப்பிரிக்கா முதலிய தேசங்களிலுள்ளவர்கள் ரூபா 6-8-0 முன்பணமாக மணியார்டர் அல்லது போஸ்டலார்டர் அனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

## 1000 கணக்கான வியாபாரிகள், மாணவர்கள், குமஸ்தாக்கள் திருப்தியடைந்த உலகப் பிரசித்திபெற்ற

# 5-மாத இங்கிலீஷ் கோர்ஸ்.

சொற்ப ஆங்கிலம் தெரியாமல் தொழிலில் பெருத்த நஷ்டமடையாதீர்கள்! தபால் மூலம் வெகு சுலபமாய் தொழிலுக்கு யாதொரு இடையூறின்றி 1 மீ முதல் 5 மீ திற்குள் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

நாகை ரேஞ்சு ஸ்கூல் இன்ஸ்பெக்டர் எழுதுகிறார்:—இங்கிலீஷ் அட்சரங்கள்கூடத் தெரியாதிருந்தவர்கள் இரண்டு வருஷத்தில் காலேஜ் மாணவர்களுக்கு மேலாக ஆங்கிலத்தில் உபந்நியாசிக்க கற்றுக்கொடுக்கப்பட்டிருந்தனர். சொற்ப கோர்ஸ்கள்தான் ஸ்டாக்கிலிருக்கின்றன. தங்கள் விலாசத்தை உடனே அனுப்பி பிராஸ்பெக்டஸை இனாமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிட்டியூட், நாகூர்.

சென்னை, ச. க. சந்தலிங்கநாடார் எழுதிய சிறந்த செந்தமிழ் காவல்

பார்க்கப் புதுமை! படிப்பதற்கினிமை!!

பலைப்பழமை எனலும்

# மலையாளத்து மர்மம்.

நாவலிற் சிறந்த நாகரீக நாவல்
நாட்டிற் குகந்த நவீனநாவல்
அற்புதக் கற்பித அதிசய நாவல்
சித்திரப் படங்கொண்ட செந்தமிழ் நாவல்
மானிடர்க்கேற்ற மனோகர நாவல்
புத்திபோதிக்கும் புதிய நாவல்

250 பக்கம், நான்கு சித்திரப்படங்கள்.

புத்தகம் 1-க்கு விலை ரூ. 1—4—0. உடனே எழுதுங்கள்

விலாசம்:— மானேஜர்,
ரஞ்சித மனோகர புஸ்தகசாலை,
53. செட்டித்தெரு கொழும்பு.

## ஹார்லி மாத்திரைகள்.

இம்மாத்திரைகள் இரத்தத்தை விருத்திசெய்து கெட்டுப்போன இரத்தத்தை சுத்திசெய்யவும், நீர்ச்சுருக்கு, குலிகாய், நெஞ்சுவலி, காசம், இருமல், குன்மம், சீதபேதி, வாந்திபேதி இன்னும் சகல வியாதிகளையும் நீக்கி பசி தீபனத்தை யுண்டாக்கி ஆயுள் விர்த்தி செய்கிறது.

30 மாத்திரைகள் கொண்ட டப்பி ரூ 1—0—0

விலாசம்;—வி. ஏ. ஞானப்பிரகாசம்,
டாக்டர் ஹார்லிஸ் பங்களா, தல்லாகுளம், மதுரை.

## எங்கும் கியாதி பெற்ற

# இரணியல் ஜரிகை வஸ்திரங்கள்.

சகல ஜாதியாருக்கும், மொத்தமாக வியாபாரிகளுக்கும் அவரவர் விருப்பத்திற்கிணங்கும்படி புடவை, கவணி, ஸாரி பலமாதிரி புளியிலைகரை நேரியல், ஜரிகைச் சேலை, விரியப்பு ஜரிகை துப்பட்டாக்கள், வேஷ்டிகள், கட்டி கிளுசுகள், அநேக விதமான துண்டுகள், பட்டுத் துப்பட்டாக்கள் முதலிய சவ்வித வஸ்திரங்களும் உயர்வான தரமாக ஆர்டர் கிடைத்த 10 தினங்களுக்குள் வி. பி. மூலமாக அனுப்பப்படும். கூடுதல் விபரம் வேண்டியவர்கள் மானேஜர் மூலமாக அறிந்து கொள்ளலாம்.

இ. ஏ. நீலகண்டபிள்ளை,
மானேஜிங் புரொப்ரைட்டர்,
"இரணியல் கிளாத் ஸ்டோர்"
இரணியல், நெய்யூர் போஸ்டு, தென் திருவிதாங்கூர்.


Printed and Published By S. A. Muthu Nadar at the Sri Muthumariamman Press, Aruppukotta.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection